# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

# ADMINISTRATIVE MANAGEMENT THEORIES IN SANGAM LITERATURE



பதிப்பாசிரியர்

முனைவர் க. முருகேசன்

# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

**(தேசியக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர் : **முனைவர் க. முருகேசன்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2017

வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : XVI + 610 - 626

விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 85267 - 35 - 2**


## Administrative Management Theories in Sangam Literature


Editor's : **Dr. K. Murugesan**

Copyright's : Editor

First Edition : August, 2017

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : XVI + 610 - 626

Prize : **Rs. 400/-**

முனைவர் க. பழனிவேல் 566
ஔவையார் பாடல்களில் சிறந்த நிர்வாகத்திற்கான அறிவுரைகள்

முனைவர் த. பிரியா 571
இலக்கியங்கள் உணர்த்தும் வரி மேலாண்மைக் கூறுகள்

முனைவர் ஜெ. நிஷாந்தினி 575
புறநானூற்றில் போர் நிர்வாகச் சிந்தனைகள்

சி. நித்யா 578
புறநானூற்றில் போர் மேலாண்மை

முனைவர் ந. விஜயசுந்தரி 581
ஐங்குறுநூற்றில் தோழியின் நிர்வாகத்திறன்

வெ. மைதிலி 585
பாட்டும் தொகையும் கூறும் வணிகமும் நீர் மேலாண்மையும்

முனைவர் இரா. மணிமேகலை 590
கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் மனிதவள மேலாண்மை

முனைவர் க. முருகேசன் 598
பதிற்றுப்பத்தில் சேரமன்னர்களின் நிர்வாகத்திறன்

முனைவர் சு. ஞானப்பூங்கோதை 606
பெரும்பாணாற்றுப்படையில் வணிக மேலாண்மை

# 105. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் மனிதவள மேலாண்மை

**முனைவர் இரா. மணிமேகலை**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

தொல்குடியாக விளங்கும் தமிழர்களுக்குப் பெருஞ்செல்வமாகிய இலக்கியக் குவையாகக் கிடைத்த செவ்வியல் இலக்கியங்கள் உலகினரால் பேரிலக்கியங்களாகப் பெரிதும் போற்றப் பெறுகின்றன. இவ்விலக்கியங்கள் எல்லாம் பொருண்மைகளுக்கும் இடமளித்து எக்காலத்தும் பொருந்துகின்ற இறவாத புதுநலனைக் கொண்டு திகழ்கின்றன. மிகப் பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்ட இவ்வினக் குழுவினர் தாம் உற்று உணர்ந்தவற்றையே படைப்புகளாக்கியுள்ளனர். பாட்டும் தொகையுமாய்க் கிடைத்த பதினெண் மேல்கணக்கு நூல்களுள் பதிற்றுப்பத்து தமிழ்க் குடியின் ஆவணப்பதிவாக விளங்குகிறது எனலாம். அந்நூலில் பரணர் பாடிய ஐந்தாம் பத்துப்பாடல்களில் புலனாகும் மனிதவள மேலாண்மைச் செய்திகளை விளக்கும் நோக்கில் இவ்வுரை அமைகிறது.

## பதிற்றுப்பத்து

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து சேரமன்னர்கள் பதின்மரைக் குறித்துப் பத்துப்புலவர்கள் பாடியதாக அமைந்துள்ளது. பதிகம் எனும் அமைப்பில் பத்துப்பாடல்கள் வீதம் நூறு பாடல்கள் இருந்தன என்றும் முதல் பத்தும் இறுதிப்பத்தும் கிட்டாது போக ஏனைய எண்பது பாடல்கள் எஞ்சியுள்ளன என்றும் இலக்கிய வரலாறு கூறுகின்றது. எண்பது பாடல்களும் இரண்டு சேர மன்னரின் வழித்தோன்றல்களாகிய எட்டு சேர மன்னர்களின் வாழ்வியலைப் பாடுகின்றன. உதியஞ்சேரல் வழித்தோன்றல்களான ஐந்து சேரமன்னர்களும் அந்துவஞ்சேரல் இரும்பொறை வழித்தோன்றல்கள் மூவருமாக எண்மர் குறித்த பாடல்களாக அமைந்துள்ளன. பதிற்றுப்பத்தின் ஆவணப்பதிவு முறையை ஒட்டியே பிற்காலத்தில் சோழர்கள் கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் ஆகியனவற்றில் மெய்க்கீர்த்திகள் அமைந்துள்ளன என்று கூறுவர்(பதிற்றுப்பத்து, ஔவை அ. துரைசாமிப்பிள்ளை பதிற்றுப்பத்தும் பதிகங்களும் தி.வை.சதாசிவபண்டாரத்தார்) பதிற்றுப்பத்தின் பாடல்கள் புறப்பொருளில் அமைக்கப்பட்டிருந்தாலும் அகவாழ்வையும் இணைத்துப் பேசுவதைக் காணமுடிகிறது. இந்நூலில் கூறப்படும் சேர அரசர்கள் வஞ்சி நகரையும் கருவூரையும் தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.

வஞ்சி நகரிலிருந்து இமயவரம்பன் இமயவரம்பனின் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் இமயவரம்பனுக்கும் வேள்ஆவிக்கோமான் பதுமன் மகளுக்கும் பிறந்த மூத்த மகன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இமயவரம்பனுக்கும் சோழன் மணக்கிள்ளி மகளுக்கும் பிறந்த மகன் கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனும் இமயவரம்பனுக்கும் வேள் ஆவிக் கோமான்